R1902 (page 278)

# தாவீது மற்றும் கோலியாத்

# DAVID AND GOLIATH

1 சாமுயேல்17:38-51

“யுத்தம் கர்த்தருடையது.” - 1 சாமுயேல் 17:47

இந்தப் பதிவிலிருந்து கிறிஸ்தவன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமானது, யுத்தம் கர்த்தருடையது எனும் ஆதார வசனத்தின் வார்த்தைகளில் சுருக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் எப்போதும் இதை மனதில் நிறுத்திக்கொண்டவனாக, தேவன் அருளும் பெலத்தினால் பெலப்பட்டவனாக, தாவீதை வேறுபடுத்திக்காட்டின விசுவாசம், தைரியம் மற்றும் வீரத்தோடுகூட, இருளின் மகா அதிகாரங்களுக்கு எதிராக யுத்தத்திற்குத் தினந்தோறும் கடந்துபோவானாக; மேலும் அவன்முன் எந்தச் சத்துருக்களும் நிற்க இயலாது. வெற்றிக்கு மகா இன்றியமையாத ஒன்று, விசுவாசமாகும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் அல்லது விசுவாசமில்லாமல் நமக்கான அவரது பரிந்துபேசுதலைப் பெற்றுக்கொள்வது என்பது கூடாதகாரியம்.

விசுவாசத்தினை உடையவர்களாய் இருப்பதினால், நமக்கு மாம்சத்துக்கேதுவான போராயுதங்கள் தேவைப்படுவதில்லை; மனுஷனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எந்தப் போராயுதமும் நமக்கு எவ்விதத்திலும் உதவிசெய்கிறதில்லை; ஆனால் தாவீதினுடைய கவணும், கூழாங்கல்லும் செய்த பிரம்மாண்டங்கள்போன்ற மகா பிரம்மாண்டங்களை, பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட விசுவாசத்தினால் நிகழ்த்த முடியும். கவணும், கூழாங்கல்லும் தாவீதினால், பயன்படுத்திப் பார்க்கப்படாத போராயுதமல்ல. அவர் எப்போதும் அவைகளை வைத்துப் பயிற்சி செய்துகொண்டு வந்தவராய் இருந்தார்; இப்படியாக அதைப் பயன்படுத்தும் விஷயத்தில் கைத்தேர்ந்தவராகவும், தைரியமானவராகவும் காணப்பட்டார். ஆகையால் கிறிஸ்தவனும் ஜீவியத்தின் சிறுசிறு காரியங்கள் அனைத்திலும், தொடர்ச்சியாகத் தேவனைச் சார்ந்திருப்பதில் பயிற்சி பண்ணிக்கொண்டு வரவேண்டும்; பின்னர் இராட்சத சோதனைகள் வருகையில், அவன் பயிற்சிபண்ணி வந்த விசுவாசமானது, சோதனைகளைச் சந்திப்பதற்கும், அதை ஜெயங்கொள்வதற்கும் மிகவும் உதவி செய்கின்றதாயிருக்கும். சோதனையானது மிகக் கடினமானதாய் இருக்குமானால், [R1902 : page 279] விசுவாசத்தினுடைய வெற்றியும் மிக மகிமையானதாய் இருக்கும்; இந்த அனுபவத்தினால் அடையப்பெரும் குணலட்சணத்தினுடைய பெலப்படுதலும் அதிகமாய் இருக்கும். சந்தேகத்திற்கிடமின்றி சிங்கத்துடனும் கரடியுடனும் ஏற்பட்ட முந்தைய போராட்டமும், அதில் தேவன் தாவீதுக்குக் கொடுத்த வெற்றியும்தான், பிற்பாடு கோலியாத்தின் வல்லமையைச் சவால் விடுவதில், அவருக்கு அத்தகைய தைரியத்தைக் கொடுத்ததாய் இருந்தது. ஆகையால் தேவனிடத்திலுள்ள விசுவாசத்தின் மூலமாய், நாம் போராடும் ஒவ்வொரு யுத்தமும், நாம் ஜெயிக்கும் ஒவ்வொரு வெற்றியும், எதிர்க்கால போராட்டங்களைச் சந்திப்பதற்குரிய பலத்தை வளர்த்துகின்றது; இன்னுமாக நம்முடைய இறுதி ஜெயங்கொள்ளுதலையும் மிகவும் உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

-------------------